# திருக்கோஷ்டியூரில் மாசிமகம் தெப்ப உத்ஸவம்





திருக்கோஷ்டியூர் சௌமியநாராயண பெருமாள் கோயிலில் செவ்வாய்க்கிழமை ஜோசியர் தெப்பக்குளத்தில் நடைபெற்ற பகல் தெப்பம். (வலது) சிறப்பு அலங்காரத்தில் உற்சவர்.

**திருப்பத்தூர், மார்ச் 3:** சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகேயுள்ள திருக்கோஷ்டியூர் சௌமியநாராணயப் பெருமாள் கோயில் மாசிமகம் தெப்ப உத்ஸவம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தக் கோயிலில் மாசிமகம் தெப்பத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதைத் தொடர்ந்து, தினமும் உற்சவ பெருமாள் பகலில் திருவீதி புறப்பாடும், இரவில் சிம்மம், அனுமன், கருடன், ஷேஷவாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் வீதியுலா வந்தார்.

விழாவின் முக்கிய நிகழ்வான செவ்வாய்க்கிழமை தெப்பத் திருவிழா நடைபெற்றது. இதையொட்டி, சுவாமி தங்கத் தோளுக்கினியானில் திருவீதி புறப்பாடு நடைபெற்று, காலை 10 மணிக்கு மேல் உற்சவர் ஸ்ரீசௌமியநாராயணப் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியருடன் சர்வ அலங்காரத்தில் குளக்கரை எதிரே தெப்ப மண்டபத்தில் எழுந்தருளினார்.

தொடர்ந்து சிறப்பு பூஜைகள், தீபாராதனைகள் நடைபெற்று, மங்கல வாத்தியங்களுடன் சர்வ அலங்காரத்தில் தங்கப் பல்லக்கில் திருக்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள தெப்பத்தில் எழுந்தருளினார்.

சுவாமிக்கு மகா தீபம் காட்டப்பட்டு தெப்பம் திருக்குளத்தை ஒருமுறை பகல் தெப்பமாக வலம் வந்தது. தெப்பத்தில் பவனி வந்த சௌமியநாராயணனை ஆயிரக்கணக்கான பக்தர்கள் திருக்குளத்தைச் சுற்றி நின்று வழிபட்டனர்.

தொடர்ந்து, இரவு 7.30 மணிக்கு இரவு தெப்பம் நடைபெற்றது. பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த பக்தர்கள் நினைத்த காரியம் நிறைவேற்ற வேண்டி திருக்குளத்தைச் சுற்றி அகல் விளக்கு தீபம் ஏற்றி வழிபட்டனர்.

இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் டி.எஸ்.கே. மதுராந்தகநாச்சியார், மேலாளர் இளங்கோ, கண்காணிப்பாளர் சரவணகணேஷ் ஆகியோர் செய்தனர்.

திருப்பத்தூர் நகர் காவல் துணைக் கண்காணிப்பாளர் செல்வகுமார் தலைமையில், போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். புதன்கிழமை காலை ஜோசியர் தெப்பக்குளத்தில் தீர்த்தவாரி நடைபெறுகிறது.

## சாத்தூர் கோயிலில் திருக்கல்யாணம்

**சாத்தூர், மார்ச் 3:** சாத்தூர் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலில் திருக்கல்யாணம் நடைபெற்றது.

இந்தக் கோயிலில் மாசி மகம் திருவிழாவை முன்னிட்டு, கடந்த 11 நாள்களாக பாலசுப்பிரமணிய சுவாமி, வள்ளி, தெய்வானையுடன் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி, வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். செவ்வாய்க்கிழமை காலை முதல் சுவாமி, வள்ளி தெய்வானைக்கு சிறப்பு அபிஷேகம், தீபாராதனைகள் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து, திருக்கல்யாணம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.






சென்னை அண்ணா அறிவாலயத்தில் விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிட விருப்ப மனு அளித்த ராஜபாளையம் தெற்கு நகர செயலாளர் பேங்க் ராமமூர்த்தி, மற்றும் விருதுநகர் தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளரும், 27-வது வார்டு நகர்மன்ற உறுப்பினருமான பி.சுமதி ராமமூர்த்தி. ADVT


# 'இயற்கை பாதுகாப்பில் முன்னோடி விருது' வழங்கும் நிகழ்ச்சி

**ராமேசுவரம், மார்ச் 3:** ராமநாதபுரத்தில் வனத் துறை சார்பில் 'இயற்கை பாதுகாப்பில் முன்னோடி விருது' வழங்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ராமநாதபுரம்வன உயிரினகோட்டம் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், இயற்கை பாதுகாப்பு, வன விலங்குகளை பாதுகாத்தல் உள்ளிட்ட பணிகளில் சிறப்பாகச் செயல்பட்ட காயத்ரி உஸ்மானுக்கும், இயற்கை சார்ந்த விழிப்புணர்வு முயற்சிகளை மேற்கொள்ளும் பணிகளில் சிறப்பாகச் செயல்பட்ட பொருளாதாரக் குற்றப் பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் சுபாஷ் சீனிவாசனுக்கும் 'இயற்கை பாதுகாப்பில் முன்னோடி விருதும்', ரூ.25 ஆயிரம் காசோலையும், பாராட்டுச் சான்றிதழும்



ராமநாதபுரத்தில் வனத் துறை சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் 'இயற்கை பாதுகாப்பில் முன்னோடி விருது' பொருளாதாரக் குற்றப்பிரிவு உதவி ஆய்வாளர் சுபாஷ் சீனிவாசனுக்கு வழங்கிய மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்.

ளையும் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் வழங்கினார்.

இதேபோல, மீனவர்களின் வலையில் சிக்கிய கடல்பசுவை உயிருடன் மீட்டு கடலில் விட்ட மீனவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில், வன உயிரின காப்பாளர் அபிலீஷ்பிரபு, மீன் வளத் துறை துணை இயக்குநர் சின்னகுப்பன், மீன் வளத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மகளிர் கல்லூரி ஆண்டு விழா



சிவகாசி எஸ்.எப்.ஆர். மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டு விழாவில் மாணவிக்கு பரிசு வழங்கிய கோவை பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி முதல்வர் ப.பா.ஹாரதி

**சிவகாசி, மார்ச் 3:** சிவகாசி எஸ்.எப்.ஆர். மகளிர் கல்லூரியில் 57-ஆவது ஆண்டு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்சிக்கு கல்லூரித் தலைவர் திலகவதி ரவீந்திரன் தலைமை வகித்தார். கோவை பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி முதல்வர் ப.பா. ஹாரதி, பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள், சான்றிதழ்களை வழங்கிப் பேசியதாவது:

தற்போது பெண்கள் சர்வதேச அளவில் பல துறைகளில் சாதனை புரிந்து வருகின்றனர். நீங்கள் அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயல்பட வேண்டும். கல்லூரிப் படிப்பு முடிந்தாலும் நீங்கள் சமுதாயப் பணியாற்ற வேண்டும். உங்களுக்கு தாழ்வு மனப்பான்மை இருக்கக் கூடாது. நான் சாதிக்கப் பிறந்தவள் என்ற எண்ணம் இருக்க வேண்டும். எதில் ஈடுபட்டாலும் அதில் முழு ஆர்வத்தோடு செயல்பட்டு வெற்றி பெற வேண்டும் என்றார் அவர். கல்லூரி முதல்வர் ஆர். சுதாபெரியதாய் ஆண்டறிக்கை வாசித்தார். நிகழ்ச்சியில் கல்லூரி நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மகேஷ்வரன், பிரீத்திவசீகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இறுதியில் மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதற்கான ஏற்பாட்டை உதவிப் பேராசிரியர்கள் சு.சோபனா, ச.தீபா ஆகியோர் செய்தனர். முன்னதாக, கல்லூரிச் செயலர் அருணாஅசோக் வரவேற்றார். மாணவி மு.இந்துராணி நன்றி கூறினார்.

# தொழிலாளி தீக்குளித்து தற்கொலை

**சிவகாசி, மார்ச் 3:** சிவகாசி அருகே செவ்வாய்க்கிழமை குடும்பப் பிரச்னையில் பட்டாசுத் தொழிலாளி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார்.

சிவகாசி அருகேயுள்ள சித்தமநாயக்கன்பட்டியைச் சேர்ந்த பட்டாசுத் தொழிலாளி மாரீஸ்வரன் (32). இவர் அடிக்கடி மது அருந்திவிட்டு வந்து மனைவி ஐஸ்வர்யாவுடன் தகராறில் ஈடுபட்டு வந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐஸ்வர்யா குழந்தைகளை அழைத்துக் கொண்டு தனது தாய் வீட்டுக்குச் சென்றுவிட்டார்.

இந்த நிலையில், மாரீஸ்வரன் பெட்ரோலை தனது உடலில் ஊற்றி தீக்குளித்தார். இதில் பலத்த காயமடைந்த அவர் விருதுநகர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார். இதுகுறித்து எம்.புதுப்பட்டி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நடனக் கலைஞர் தற்கொலை

**ராஜபாளையம், மார்ச் 3:** விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் நடனக் கலைஞர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

ராஜபாளையம் தெற்கு மலையடிப்பட்டி பகுதியைச் சேர்ந்த முருகன் மகன் ஔவைசந்திரன் (25). நடனக் கலைஞரான இவர் கோவில்பட்டி மந்தித்தோப்பு பகுதியைச் சேர்ந்த பொன்செல்வி (25) என்பவரை காதலித்து திருமணம் செய்துகொண்டார். தற்போது பொன்செல்வி 8 மாத கர்ப்பிணியாக உள்ளார். ஔவைசந்திரனுக்கு மது அருந்தும் பழக்கம் இருந்ததாகவும், அதைக் கைவிடுமாறு கூறி உறவினர்கள் கண்டித்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், திங்கள்கிழமை இரவு வீட்டில் அனைவரும் தூங்கிய பிறகு, நள்ளிரவில் ஔவைசந்திரன் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து ராஜபாளையம் தெற்கு காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# நாய்கள் கடித்ததில் 20 செம்மறி ஆடுகள் உயிரிழப்பு



எஸ். கீரந்தை கிராமத்தில் நாய்கள் கடித்ததில் உயிரிழந்த செம்மறி ஆடுகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்த கால்நடை மருத்துவத் துறையினர்.

**கமுதி, மார்ச் 3:** சாயல்குடி அருகே தெருநாய்கள் கடித்ததில் 20 செம்மறி ஆடுகள் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தன.

ராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி அருகேயுள்ள எஸ். கீரந்தை கிராமத்தைச் சேர்ந்தவர் செந்தூர்பாண்டி. விவசாயியான இவர் 120 செம்மறி ஆடுகளை வளர்த்து வருகிறார். இந்த நிலையில், திங்கள்கிழமை மாலை மேய்ச்சலுக்கு சென்று வந்த ஆடுகளை வீட்டுக்கு அருகேயுள்ள பட்டியில் அடைத்துவிட்டு, வீட்டுக்குச் சென்றுவிட்டார். அப்போது, அங்கு வந்த தெருநாய்கள் ஆடுகளை கடித்து குதறின. இதில் 20 ஆடுகள் உயிரிழந்தன. இதுகுறித்து செத்தூர்பாண்டி சாயல்குடி கால்நடை மருத்துவமனைக்கு தகவல் தெரிவித்தார். சம்பவ இடத்துக்கு வந்த கால்நடை மருத்துவர் இறந்த ஆடுகளை கூறாய்வு செய்தும், காயமடைந்த 5-க்கும் மேற்பட்ட ஆடுகளுக்கு தடுப்பூசியும் செலுத்தினார்.

இந்த நிலையில், இறந்த ஆடுகளுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என செந்தூர்பாண்டி கோரிக்கை விடுத்தார்.


மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம் மதுரை

ஐ அ 347/2022 IN ஒ என் 105/2020

தலைமை மேலாளர்,
பாரத ஸ்டேட் வங்கி, பெரியகுளம் கிளை,
பெரியகுளம் 625601.

எதிர்

1. திரு. ஓ. எம். எஸ். வேல்முருகன், த/பெ சிங்காரவேலன்
2. வனிதா, க/பெ, ஓ. எம். எஸ். வேல்முருகன்

11/:30, ஜெயராம் நகர் சின்ன பேராளி,
ரயில்வே ஜங்ஷன் விருதுநகர்

...2,3 எதிர் மனுதாரர்கள் 2,3 பிரதிவாதிகள்.

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் வங்கிக்கு வரவேண்டிய கடன் பாக்கித் தொகையை வரப்பெற்ற தாக்கல் செய்த மனுவில் சொத்துக்களை அட்டாச் செய்வதற்காக தாக்கல் செய்த மனுவில் தாங்கள் ஆஜர் ஆவதற்காக 15-04-2026 அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. தங்களுக்கு ஆட்சேபணை இருந்தால் அன்று காலை 10 மணிக்கு மேற்படி கடன் வசூல் தீர்ப்பாயம் பிளஸ்ஸன்லல் லெவல் IV கட்டிட வளாகத்தில் சி டி ஓ காம்ப்ளக்ஸ் முதல் தளத்தில் தல்லாகுளம் மதுரை 625002 வாய்தா உள்ளபடியால் தாங்கள் நேரில் அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ அல்லது தங்கள் ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது

N. சுந்தரராஜன், பி.ஏ., பி.எல்., வழக்கறிஞர்.
33, வார்ப்பு கண்ணார் தெரு, மதுரை 625001.



பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

கடன் வசூல் மேலாண்மைக் கிளை (ARMB), எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு.
கோயம்புத்தூர் - 641 018. போன் : 0422 2231314, 0422-2231345. மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 27.03.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)**

**முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 27.03.2026, மாலை 3.00 மணி வரை**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/அடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : பட்டியலிடப்பட்டது (26.02.2026 அன்று ஆன்லைனில் பெற்ற விபரப்படியான வில்லங்கச் சான்றின்படியானது).

**குவியல்–1 க்கு :** 1. ஆவண எண்.5/2023/பிற கடன் உத்தரவுகள்/பதிவு நாள் 10.10.2023/வரி வசூல் அலுவலர், மத்திய மண்டலம் 2 சென்னை எதிர் திரு. சரவணன் பழனியப்பன். 2. ஆவண எண்.2/2024/பிற கடன் உத்தரவுகள்/பதிவு நாள் 08.05.2024/தொழிலாளர் இட்டு வைப்பு நிதி வசூல் அலுவலர், சிவகாசி எதிர் சரவணா டெக்ஸ் பெயரிலுள்ள இச்சொத்து.

**குவியல் 2 க்கு :** 1. ஆவண எண்.2/2024/பிற கடன் உத்தரவுகள்/பதிவு நாள் 08.05.2024/தொழிலாளர் இட்டு வைப்பு நிதி வசூல் அலுவலர், சிவகாசி எதிர் சரவணா டெக்ஸ் பெயரிலுள்ள இச்சொத்து.

**குவியல் 3 க்கு :** 1. ஆவண எண்.10/2023/மெமோ காபி/பதிவு நாள் 07.07.2023 சென்னை தற்காலிகத் தொகுப்பு அமலாக்க இயக்ககம் எதிர் திரு. சரவணன் பழனியப்பன். 2. சென்னை வருமானவரி ஆணையாளர் அவர்களால் வெளியிடப்பட்ட உத்தரவு எண்.ITBA/COM/F/17/2022-23/1046307267(1), நாள் 14.10.2022ன்படி ஆவணங்களைப் பதிவு செய்வது தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. தற்காலிகத் தொகுப்பு அமலாக்க இயக்ககம், சென்னை அவர்களது கடித எண்.ECIR/CEZO-I/63/2022 வெளியிட்ட உத்தரவுகளின்படி தற்காலிகமாக இணைப்பு ஆணை எண்.5/2023, ஆவணங்கள் பதிவு செய்வது தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. மெட்ராஸ் உயர்நீதிமன்ற உத்தரவுகள், வழக்கு எண். Crl.OP.எண்கள் 16449,16455,16464,16467,16473,16478 மற்றும் 16482 / 2024, நாள் 19.07.2024 ஆகிய வழக்குகளில் 22.09.2022 ல் பட்டியலில் செருகப்பட்ட பற்றுக் குறிப்பினை விலக்க இடப்பட்ட உத்தரவு நிறைவேற்றப்பட்டது.

**பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை**

| கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம் | பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்) | அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை கொள்நிலை/ஆக்கபூர்வ சுவாதீனம் | 1) ரிசர்வ் விலை 2) முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை |
|---|---|---|---|
| **கிளை : ஈரோடு மெயின் (ID: 016500) (தற்போது கோயம்புத்தூர் ARMB–க்கு மாற்றப்பட்டுள்ளது)** **M/s. ஸ்பைஸ் டிரேடர்ஸ்** **கடன்தாரர் :** **M/s.ஸ்பைஸ் டிரேடர்ஸ்,** எண்.104/4, II வது தளம், கணேஷ் அபார்ட்மெண்ட், கங்காஸ்ரீ நகர், கதீட்ரல் ரோடு, கோபாலபுரம், சென்னை – 600 086 **கடன்தாரர் மற்றும் பங்குதாரர் :** **திரு. சரவணன் பழனியப்பன்** எண்.105, இங்கிள்வுட் எஸ்டேட், கொம்மக்காடு, ஏற்காடு, சேலம் – 636 601. **கடன்தாரர் மற்றும் பங்குதாரர் :** **திருமதி. V.பிரீத்தா** எண்.37, பாரதி நகர், ராஜபாளையம் – 626 117. **உத்தரவாதமளித்தவர் :** **திருமதி. மேகலா பழனியப்பன்** எண்.105, இங்கிள்வுட் எஸ்டேட், கொம்மக்காடு, ஏற்காடு சேலம் – 636 601. | **(அட்டவணைச் சொத்து) :** **குவியல்–1 : திரு. சரவணன் பழனியப்பன் பெயரிலுள்ள சொத்து.** (i) விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பதிவு மாவட்டம், ராஜபாளையம் சார் பதிவு அலுவலகம், ராஜபாளையம் தாலூகா, கொத்தாங்குளம் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.524/2, இதிலுள்ள 3 ஏக்கர் 15 செண்டிற்குச் சமமான 1.27.50 ஹெக்டேர், இதில் வடபுற பகுதி, புதிய புஞ்சை சர்வே எண்.524/2Bல் உள்ள 1 ஏக்கர் 3 செண்டிற்குச் சமமான 0.41.5 ஹெக்டேருக்கு எல்லைகள் விபரம்: வடக்கே – V.S.பெருமாள்ராஜின் புஞ்சை நிலம், கிழக்கே – சீனியப்ப நாடாரின் புஞ்சை நிலம், தெற்கே – பவுல்ராஜின் புஞ்சை நிலம், மேற்கே – V.S.பெருமாள்ராஜாவின் புஞ்சை நிலம். மேற்படி எல்லைகளுக்கிடையிலுள்ள 1 ஏக்கர் 03 செண்ட் மற்றும் கிணறு மற்றும் அங்குள்ள 3 எச்.பி. மின்சார மோட்டாரில் 1/3 பங்குடன். (ii) விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பதிவு மாவட்டம், ராஜபாளையம் சார் பதிவு அலுவலகம், ராஜபாளையம் தாலூகா, கொத்தங்குளம் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.169/1C, தற்போது புதிய சர்வே எண்.169/1C1, இதிலுள்ள 1 ஏக்கருக்குச் சமமான 0.40.50 ஹெக்டேருக்கு எல்லைகள் விபரம்: வடக்கே – ஓடை, கிழக்கே – இருளாண்டி நாடாரின் புஞ்சை நிலம், தெற்கே – சீனியப்ப நாடாரின் புஞ்சை நிலம், மேற்கே – சர்வே எண்.169/1B நிலம். இவ்வெல்லைகளுக்கிடையிலுள்ள 1 ஏக்கர். (iii) விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பதிவு மாவட்டம், ராஜபாளையம் சார் பதிவு அலுவலகம், ராஜபாளையம் தாலூகா, கொத்தங்குளம் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.169/1B இதிலுள்ள 1 ஏக்கர் 77 செண்டிற்குச் சமமான 0.71.50 ஹெக்டேருக்கு எல்லைகள் விபரம் : வடக்கே – ஓடை மற்றும் சரவணனின் புஞ்சை நிலம், கிழக்கே – சரவணனின் புஞ்சை நிலம், தெற்கே – விஷ்வா இம்பெக்ஸின் | அ) 30.05.2023 ஆ) (i) கணக்கு: 016500JT00000116– 28.02.2026 அன்று, ரூ.9,53,42,640.91 (மற்றும் 01.03.2026 தேதியிலிருந்து பின்வட்டி, பிற செலவுகளுடன்) (ii) கணக்கு: 016500JT00000125– 28.02.2026 அன்று, ரூ.5,10,65,446.58 (மற்றும் 01.03.2026 தேதியிலிருந்து பின்வட்டி, பிற செலவுகளுடன்) (iii) கணக்கு: 016500EG00000059– 28.02.2026 அன்று, ரூ.6,76,65,039.86 (மற்றும் 01.03.2026 தேதியிலிருந்து பின்வட்டி, பிற செலவுகளுடன்) மொத்த தொகை : ரூ.21,40,73,127.35 (ரூபாய் இருபத்து ஒரு கோடியே நாற்பது லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து நூற்று இருபத்து ஏழு மற்றும் பைசா முப்பத்து ஐந்து மட்டும்) இ) 05.10.2023 (விருதுநகர் சொத்துக்களுக்கு) 06.10.2023 (காரைக்குடி சொத்துக்களுக்கு) ஈ) அடையாளம் | **குவியல்–1 :** 1) ரூ.2,47,80,000/– (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து ஏழு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) 2) ரூ.24,78,000/– (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து எழுபத்து எட்டாயிரம் மட்டும்) 3) ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் :** 27.03.2026 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை |
| புஞ்சை நிலம், மேற்கே – ஓடை. மேற்படி எல்லைகளுக்கிடையிலுள்ள 1 ஏக்கர் 77 செண்ட். (iv) விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பதிவு மாவட்டம், ராஜபாளையம் சார் பதிவு அலுவலகம், ராஜபாளையம் தாலூகா, மேலப்பட்டம் கரிசல்குளம் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.144/2B புதிய சர்வே எண்.144/2B5, இதிலுள்ள 39 செண்டிற்குச் (1600 சதுர மீட்டர்) சமமான 0.16.00 ஹெக்டேருக்கு எல்லைகள் விபரம்: வடக்கே – கிழமேல் பொது வழித்தடம், கிழக்கே – A.K.D.ராமகிருஷ்ணராஜாவின் மனை, தெற்கே – A.K.D.ராமகிருஷ்ணராஜாவின் மனை, மேற்கே – கொத்தங்குளம் கிராம புஞ்சை. மேற்படி எல்லைகளுக்கிடையிலுள்ள 39 செண்ட். லே அவுட்டின் அனைத்து ரோடுகள் மற்றும் வழித்தடங்களில் வழிநடை, வண்டித் தட உரிமைகளுடன். **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள்: 9.4745347 N , 77.5776612 E** | | | |
| **குவியல்–2 : திருமதி. V.பிரீத்தாவின் பெயரிலுள்ள சொத்து.** விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பதிவு மாவட்டம், ராஜபாளையம் சார் பதிவு அலுவலகம், ராஜபாளையம் தாலூகா, கொத்தங்குளம் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.169/1A2B, இதிலுள்ள 2 ஏக்கர் 62 செண்டிற்கு (10600 சதுர மீட்டர்) சமமான 1.06.00 ஹெக்டேருக்கு எல்லைகள்: வடக்கே – ஓடை, கிழக்கே – மண்டைய நாடாரின் நிலம், தெற்கே – மண்டைய நாடாரின் நிலம், மேற்கே – வெங்கடேஸ்வர ராஜாவின் நிலம். மேற்படி எல்லைகளுக்கிடையிலுள்ள 2 ஏக்கர் 62 செண்ட் (10600 சதுர மீட்டர்), லே அவுட்டின் அனைத்து ரோடுகள் மற்றும் வழித்தடங்களில் வழிநடை, வண்டித் தட உரிமைகளுடன். **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள்: 11.947466 N , 77.578178 E** | | | **குவியல்–2 :** 1) ரூ.2,35,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து ஐந்து லட்சம் மட்டும்) 2) ரூ.23,50,000/– (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) 3) ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் :** 27.03.2026 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை |
| **குவியல்–3 : திரு. சரவணன் பழனியப்பன் பெயரிலுள்ள சொத்து.** காரைக்குடி பதிவு மாவட்டம், காரைக்குடி இணை எண்.2 சார் பதிவாளர் அதிகார வரம்பிற்குள், காரைக்குடி தாலூகா, கல்லல் யூனியன், கல்லல் பஞ்சாயத்து, கல்லல் குரூப், கல்லல் கிராமம், எண்.I – (i) நத்தம் பட்டா எண்.232, பழைய நத்தம் சர்வே எண்.249/1, புதிய நத்தம் சர்வே எண்.249/3, இதிலுள்ள 143547.50 சதுரடிக்குச் சமமான 13336 சதுர மீட்டருக்குச் சமமான 1 ஹெக்டேர் 33.36 ஏக்கர், இதில் நடுப் பகுதி கிழமேல் வடபுறம் 46.8 மீட்டர், கிழமேல் தென்புறம் 55.8 மீட்டர், தென்வடல் கிழபுறம் – 93.8 மீட்டர், தென்வடல் மேற்புறம் – 66 + 40.2 = 106.2 மீட்டர் என மொத்தம் 55111 சதுர அடிக்குச் சமமான 5120 சதுர மீட்டர். எல்லைகள்: வடக்கு – கிழமேல் ரோடு, கிழக்கு – சர்வே எண்.249/3 ல் உள்ள விற்பனையாளர் தக்க வைத்துக் கொண்ட போர்ஷன், தெற்கு – சர்வே எண்.249/4 கால்வாய், மேற்கு – சர்வே எண்.249/1 புஞ்சை நிலம் மற்றும் 2வது இனம் வீட்டு மனைகள். *இதில் இனம் (i) நத்தம் சர்வே எண்.249/3 சொத்து I = 1.26 ஏக்கர் சென்னை, அமலாக்க இயக்குநரகத்தால் 07.07.2023 மற்றும் 24.08.2023 தேதிகளிலான மெமோ எண்.102/2023 மூலம் அட்டாச் செய்யப்பட்டுள்ளது. எனினும் பஞ்சாப் நேஷனல் வங்கியுடனான சார் பிணையம் மேற்படி அட்டாச்மெண்டிற்கு முன்னதானதாகும். எனவே பஞ்சாப் நேஷனல் வங்கிக்கே முன்னுரிமையுள்ளது. (ii) இவ்வெல்லைகளுக்கிடையில், மேற்புற பகுதியில் கிழமேல் வடபுறம் 45.8 மீட்டர், கிழமேல் தென்புறம் 45.8 மீட்டர், தென்வடல் கிழபுறம் 66 மீட்டர், தென்வடல் மேற்புறம் 7.8 + 62.4 = 70.2 மீட்டர், மொத்தம் 33573 சதுரடிக்குச் சமமான 3119 சதுர மீட்டர். எல்லைகள்: வடக்கு – சர்வே எண்.249/1 புஞ்சை நிலம், கிழக்கு – இனம் எண்.1 வீட்டு மனை, தெற்கு – சர்வே எண்.249/4 வாய்க்கால், மேற்கு – சர்வே எண்கள் 251, 252 வீட்டு மனைகள். மொத்தம் 88684 சதுரடிக்குச் சமமான 8239 சதுர மீட்டர் (சொத்து எண்.I, இனம் எண்.i மற்றும் ii க்கு), இவ்வெல்லைகளுக்கிடையிலுள்ள காலி வீட்டு மனைகள். எண்.II : பட்டா எண்.245, சர்வே எண்.249/1 ல் உள்ள 47 செண்டிற்குச் சமமான 0.19.00 ஏர்ஸுக்கு எல்லைகள்: வடக்கு – கிழமேல் வழித்தடம், கிழக்கு – நத்தம் சர்வே எண்.249/3 நிலம், தெற்கு – நத்தம் சர்வே எண்.249/3 நிலம், மேற்கு – நத்தம் சர்வே எண்.252/36 நிலம். இதன் மத்தியில் உள்ள காலி வீட்டு மனை, லே அவுட்டின் அனைத்து ரோடுகளில் மற்றும் வழித்தடம் முழுமையிலுமான வழிநடை, வண்டித்தட உரிமைகளுடன். **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 9.9849163 N , 78.6639627 E** | | | **குவியல்–3 :** 1) ரூ.4,88,30,000/– (ரூபாய் நான்கு கோடியே எண்பத்து எட்டு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) 2) ரூ.48,83,000/– (ரூபாய் நாற்பத்து எட்டு லட்சத்து எண்பத்து மூன்றாயிரம் மட்டும்) 3) ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் :** 27.03.2026 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை |

**மின்–ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்**

இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.

1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **27.03.2026 (வெள்ளிக்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும். **https://baanknet.com & www.pnbindia.in**

தேதி : 03.03.2026
இடம் : கோயமுத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாஸிச்சட்டம் 2002ன் கீழ் விதி 9(1)–ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு





உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...
www.dinamani.com